நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்,

திண்டுக்கல்.

முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,

நீதித்துறை நடுவர் எண். 1

2026 ம் ஆண்டு ஜூன் 12 –ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.P.No.18/2026**

**in**

**STC.No.1157/2025**

வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு

முனிஷ்வரி,
க/பெ. சுந்தரவடிவேல்,
எண்.16, வடக்கு சந்து,
1 வது தெரு, சிம்மக்கல்,
மதுரை 625001
மேலும்,
தலைமை ஆசிரியை,
பஞ்சாயத்து யூனியன் பிரைமரி பள்ளி,
ராஜாக்குர், மதுர – 625607

... மனுதாரர் / எதிரி

//எதிராக //

B. சாவித்ரி,
க/பெ. பாஸ்கரன்,
எண். 61/2, பிளாட் எண். 18,
CTO காலனி, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்.

... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

மனுதாரர் சார்பாக வழக்குரைஞர் **Mr. S. பரமசிவம்** அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் சார்பாக வழக்குரைஞர்

**Mr. P. ராஜாரவிகுமார்** அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர் / எதிரி தரப்பில் தனது தரப்பு சாட்சிகான எதிரி மற்றும் State Bank of India வங்கி கிளை மேலாளர் மதுரை ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மனுதாரர்/ எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தனது தரப்பில் தன்னையும், State Bank of India வங்கி கிளை மேலாளர் மதுரை ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்க அனுமதி வேண்டி கடந்த 08.04.2026 அன்று மனு தாக்கல் செய்வதாக இருந்த நிலையில் மனுதாரர் / எதிரியின் வழக்குரைஞருக்கு வரும் நீதிமன்றத்திற்கு வரும வழியில் சிறு விபத்து ஏற்பட்ட நிலையில் நீதிமன்றத்திற்கு ஆஜராகாத நிலை ஏற்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் / எதிரி அன்றைய தினம் காலை 11.15 மணிக்கு நீதிமன்றத்திற்கு ஆஜராகிவிட்டதாகவும் ஆனால், மனுதாரர் / எதிரி தரப்பில் யாரும் ஆஜரின்மையால் மனுதாரர் / எதிரி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், எனவே மனுதாரர் / எதிரி தனது தரப்பு சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை**

இம்மனுவானது இந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே இம்மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர் / எதிரி தரப்பில் தன்னையும் State Bank of India வங்கி கிளை மேலாளர் மதுரை ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. வங்கி கணக்கு அறிக்கைகளை மனுதாரர் / எதிரியே பெற்று தாக்கல் செய்ய இயலும், அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வங்கியில் மறுக்கப்பட்டதாக காணப்படவில்லை. மனுவில் கண்ட 2 சாட்சியை விசாரணை செய்ய சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே, மனுவில் கண்ட 1 சாட்சியான எதிரி முனிஷ்வரியை எதிரி தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. 2 வது சாட்சியை பொறுத்து இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனுவானது பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **12.06.2026** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.15 11:27:15 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

திண்டுக்கல்.